## ‘மா’ விவசாயிகளின்
# வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடுவீர்!

### ஒன்றிய அமைச்சருக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. கடிதம்!



*புதுதில்லி, ஜூலை 2-*

*மாம்பழ விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலை துறை அமைச்சர் சிராக் பாஸ்வானுக்கு நாடாளுமன்றத் திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் திங்கள்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.*

*அதில், ‘தமிழ்நாட்டில், மாம் பழ விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். தயாரிப்பு நிறுவனங்களின் மாம்பழ பானங்களில் உள்ள உண்மை யான மாம்பழ கூழின் உள்ளடக்கம் 2021 ஆம் ஆண்டில் 20 சதவீதமாக இருந்து 2024 ஆம் ஆண்டில் வெறும் 11 சதவீதமாகக் குறைந்துள்ளது.*

*இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, பழ அடிப்படையிலான பானங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஜிஎஸ்டி உச்சவரம்பு ஆகும். 10 சதவீதத்துக்கும் அதிகமான உண்மையான பழ உள்ளடக்கத்தைக் கொண்ட பழச்சாறுகளுக்கு 28 சதவீதம் விதிக்கப்படுகிறது. ஜிஎஸ்டி இது சர்க்கரைத் தன்மை அதிகமுள்ள கார்பனேட்டட் பானங்களைப் போன்றது. மேலும் 10 சதவீதத்துக்கும் குறைவான பழ உள்ளடக்கம் கொண்ட பானங்களுக்கு, அவற்றின் தயாரிப்பு வகையைப் பொறுத்து 18 சதவீதம் ஜிஎஸ்டி அல்லது அதற்கும் குறைவான வரி விதிக்கப்படுகிறது. எனவே, அதிக வரி வரம்புக்குள் வராமல் இருக்க தயாரிப்பாளர்கள் மாம்பழ அடிப்படையிலான பானங்களில் மாம்பழ கூழ் உள்ளடக்கத்தைக் குறைக்கின்றனர்.*

*குறைந்தபட்சம் 10 சதவீதம் பழ உள்ளடக்கம் இருந்தால், அதை ‘பழச் சாறு’ என்று பெயரிட வேண்டியது கட்டாயமாகும்.*

*ஆனால், இப்போது ‘பழ பானம்’ என பெயரை மாற்றி குறைந்த தரத்தி லான பழ பானங்களை தயாரிப்பு நிறுவனங்கள் சந்தைப்படுத்துகின்றன.*

*தயாரிப்பு நிறு வனங்களின் இந்தப்போக்கால் நாட்டில் மாம்பழ விவசாயிகள் கடுமை யான இழப்புகளை எதிர்கொள்கின்றனர்.*

*எனவே, மாம்பழ பானங்களின் தயாரிப்பாளர்கள் மாம்பழ கூழ் உள்ளடக்க பயன்பாட்டை முன்பு போலவே 20% ஆக அதிகரிக்க அறிவுறுத்தவும், பழபானங்களுக்கான சொற்களை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் உணவுத்தர நிர்ணய விதிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீறுவதைத் தடுத்து மா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாது காக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என கனிமொழி கருணாநிதி அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*



திருவண்ண்ணாமலை வடக்கு மாவட்டம், ஆரணி நகரத்தைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழக நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜாபர் அக்பர் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., ஏ.என்.உதயகுமார், ஏ.விஸ்வநாதன், பி.அருண்குமார், ஏ.அர்ஷத், ராம், ராகுல், கணேஷ், பிரசன்ன பாலாஜி உட்பட பலர் உள்ளனர்.

## உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர்
# அகிலேஷ் யாதவ் பிறந்தநாள்!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**வி.பி.சிங் அவர்களின் மண்ணில் சமூகநீதிச் சுடரை ஏந்திச் சென்று, முற்போக்கு அரசியல் பாதைக்கு ஒளியூட்டி, பிற்போக்குக் கருத்தியல்களுக்கு எதிராக, தங்கள் தந்தை முலாயம் சிங் அவர்களின் பெருமைமிகு வழியில் எப்போதும் உறுதியாக நிற்பீராக!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## பேரூராட்சி - நகராட்சி - மாநகராட்சி மன்றங்களில் உறுப்பினராக நியமனம் செய்ய
# மாற்றுத் திறனாளிகளிடம் இருந்து விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன!
### நகராட்சி நிர்வாக இயக்குநர் தகவல்!

சென்னை, ஜூலை 2-

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, (தமிழ்நாடு சட்டம். 9/1999) தமிழ்நாடு சட்டம் 30/2025-ன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம், பிரிவு 37(1) (ia) ன் படி மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்து பேரூராட்சி/ நகராட்சி/மாநகராட்சி மன்றத்திற்கு உறுப்பினராக நியமனம் செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்திற்கு https://chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியிலும், பிற மாநகராட்சி/நகராட்சி மன்றத்திற்கு https://tnurbantree.tn.gov.in/whatsnew என்ற இணையதள முகவரியிலும், பேரூராட்சி மன்றத்திற்கு https://tn.gov.in/dtp அல்லது https://dtp.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் 1/07/2025 முதல் 17/07/2025 வரை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பேரூராட்சி எல்லைக்குள் வசித்து வரும் தகுதியான விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரிடமும், நகராட்சி/மாநகராட்சி எல்லைக்குள் வசித்து வரும் தகுதியான விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்களை சம்பந்தப்பட்ட நகராட்சி/மாநகராட்சி ஆணையாளரிடம் நேரடியாக அல்லது தபால் மூலம் 17/07/2025 அன்று மாலை 03.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

